தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATURE LIBRARY
20 DEC 1982
MADRAS-600 009

வியாழக்கிழமை, 1982 மார்ச் 25.

பங்குனி 12 துன்மதி—திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நயனொடு நன்றுபுரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.''

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்கும் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை, உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கும்பகோணம் கிராம மின்சார கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கிய தொகை.

*வினா எண். 645—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணம் கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய அரசு வழங்கிய தொகை எவ்வளவு? மாநில அரசு வழங்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) இத் திட்டம் மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப் படுமா ?

(இ) இச்சங்கம் தனி அமைப்பாக (Autonomous) இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1982 மார்ச் 25

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) கும்பகோணம் கிராம மின்சார கூட்டுறவு சங்கத்திற்கு மத்திய அரசு நிறுவனமான கிராமிய மின் வழங்கு கழகம் கடனாக ரூ. 147.12 லட்சமும், மாநில அரசு பங்கு மூலதன முதலீடான மானியமுமாக ரூ. 35 லட்சமும் அளித்துள்ளது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் ஒரு கிராமிய மின்சார கூட்டுறவுச் சங்கம் அமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

(இ) இச்சங்கம் தனி அமைப்பாக இயங்கச் செய்யும் கருத்துரு அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராம மின்சார கூட்டுறவுச் சங்கம் இருப்பதால் நன்மைகள் என்ன? இந்தச் சங்கம் இயங்குவதால் அந்தப் பகுதியிலே லைன்மேன்கள் போன்றவர்கள் பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாக மின் விளக்குகள் எரிவதிலே ஏதாவது குறை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின் விநியோகத்தை இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆங்காங்கே சிறு சிறு அமைப்புகளாக வைத்து விநியோகிப்பது சிறந்தது என்று இந்திய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் மத்திய அரசின் மூலமாக நாம் இத்தகைய முறையில் சங்கத்தை ஆரம்பித்தால் பண உதவியும் செய்கிறார்கள். ஆகவே, இதை இரண்டாவது சோதனையாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. அதனால் என்ன நன்மைகள் கிடைக்கும் என்பது போகப் போகத்தான் தெரியும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இதனுடைய நன்மைகள் தீமைகள்—இந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கம் சொல்லிய கொள்கையின் காரணமாக அமல்படுத்தி வருகிறோம்—என்ன என்பது போகபோகத்தான் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதுவரையில் கண்ட அனுபவம் என்ன? இதனால் நல்ல முறையில் விநியோகம் செய்யமுடியும் என்று தெரிகிறதா? இந்தத் திட்டத்தைப் பல்வேறு கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் விஸ்தரிக்க குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தச் சங்கம் துவக்கப்பட்டது 5—7—79 ஆம் தேதி. மின் விநியோகம் செய்வதற்கு மின் விநியோகத்தை மேற்

1982 மார்ச் 25]

கொண்டது 1–7–80 இல் தான். கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக் காலம் தான் ஆகிறது. ஆகவே இதன் நடைமுறை அனுபவத்தை இப்போதே தீர்மானிப்பது சரியல்ல.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கம் மூலமாக மின் விநியோகம் செய்கிற போது மின் வாரியத்திற்கும் மக்களுக்கும் இடையிலே இப்படிச் செய்வதற்கு ஏதாவது லாபம் கிடைக்கிற வகையிலே கட்டணத் திலே தரப்படுகிறதா என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சங்கம் ஓரளவிற்கு இயங்குவதற்குரிய சக்தி கிடைக்கப்பெற வேண்டும். அந்த அடிப்படையில் சங்கத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 18 பைசா வீதம் மின்சார வாரியம் தருகிறது. ஆனால் மின் வாரியம் என்ன கட்டணங்களைப் போடுகிறதோ அந்தக் கட்டணங் களின் அடிப்படையில்தான் அவர்கள் வசூலிக்கிறார்கள். ஆகவே ஓரளவுக்கு இழப்பு இல்லாமல் இயங்கி வருவதாகத்தான் தெரியவருகிறது.

திரு. மா. சின்னராசு : அரசு விநியோக முறையை இது போன்ற கூட்டுறவு அமைப்புகளுக்குக் கொடுப்பதைப்போல் லாபகரமாகத் திறன் இருக்கிறது என்று முடிவு செய்யப் பட்டால் உற்பத்தி செய்கின்ற நிர்வாகத்தையும் இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, இது கொள்கை பற்றிய பிரச்சினை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இரண்டு இடங்களில் குறிப்பாக அமைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த இடங்கள் என்ன என்ன ? இந்த இரண்டு இடங்களில் லாபம் இல்லாவிட்டாலும் நட்டம் இல்லாமல் நடத்தப் படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே ஒன்று கும்பகோணம் ; இரண்டாவது புதுக்கோட்டை மாவட் டத்தில் திருமயம். 1–7–1980 முதல் 31–3–1981 வரையில் முதலாவது ஆண்டில் நஷ்டம் இல்லாமல் நடப்பதாகத் தெரி கிறது. முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த கிராம மின்சார சங்கமானது ஏற்படுவதற்கு கையாளக்கூடிய விதிமுறைகள் யாவை ? அந்த சங்கத்தின் நிர்வாகத்தில்

இருப்பவர்கள் நியமன உறுப்பினர்களா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா? பொது மக்களிடமிருந்து பங்குத் தொகை என்று ஏதாவது வாங்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி உருவாக்கப்படுகிறதோ அதே அடிப்படையில் உருவாக்கப்படும். ஆனால் இதிலே அதிகார பற்றற்றவர்கள் யாரும் கிடையாது. மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகக் கொண்டு அதிகாரிகளே இதில் இருக்கிறார்கள். ஒரு கோட்ட மின் பொறியாளரை அதை இயக்குவதற்கு நாம் தருகிறோம். இதிலே உறுப்பினர்கள் பங்கு தொகை உண்டு. சுமார் 10 லட்சம் ரூபாய் உறுப்பினர் பங்குத்தொகை இருக்கிறது. இதுதான் இதனுடைய நிர்வாக அமைப்பு முறை.

மின் கட்டணத்தைத் திருத்தியமைக்கும் திட்டம்.

*வினா எண். 646—திரு. கு. ரமணி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெட்ரோல், டீசல் விலை மத்திய அரசு உயர்த்தியுள்ளதால் மின் கட்டணத்தை மாநில அரசு உயர்த்தப் போகிறதா?

(ஆ) ஆம் எனில் கட்டண உயர்வின் அளவு என்ன?

(இ) அதனால் மின்வாரியத்துக்கு அதிக வருமானம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) (ஆ) மற்றும் (இ): எரி எண்ணெய் உட்பட இடு பொருள்கள் விலையுயர்வு, தமிழ்நாடு மின் வாரியம் வாங்கும் மின் சக்தியின் விலையுயர்வு மற்றும் மின் அனுப்புதலில் ஏற்படும் கூடுதல் செலவினங்கள் முதலியவற்றின் அடிப்படையில் மின் கட்டணங்களைப் பொதுவாக திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மின் உற்பத்திக்கு தேவையான அத்யாவசியமான பொருள்களின் விலையை உயர்த்தும் போது மத்திய அரசு மாநில அரசுகளை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS